Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

Calendar **Case No.CC.No. 46 /2023**

Deposition of Sworn Statement

| | |
|---|---|
| Name | : சித்தயைன் |
| Father's Name/Husband Name | : ராமசாமி |
| Village | :வரதகவுண்டனுர் |
| Taluk | : **பாப்பிரெட்டிப்பட்டி** |
| District | : **தருமபுரி** |
| Caste | : |
| Calling | : PW2 |
| Religion | : Hindu |
| Age | : 68 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21.03.2025**

**எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை.**

நான் தற்போது வரதகவுண்டனுரில் வசித்து வருகிறேன். நான் சென்னை இரயில்வே துறையில் பணிபுரிந்து பணி ஒய்வு பெற்றுள்ளேன். ஆஜர் எதிரி எனது பக்கத்து வீட்டில் வசிக்கிறார். அ.சா1 எனது மனைவி. கடந்த 28.03.2021 ம் தேதி நான் காலையில் வீட்டில்இருந்த சமயம் காலை சுமார் 7.30 மணியளவில் எனது மனைவி வாசல் தெளிக்க செல்வதாக கூறிவிட்டு வெளியில் சென்றார். திடிரென எங்கள் வீட்டில் வாசல் படி அருகில் கத்தும் சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்போது எனது மனைவி தலையில் இரத்த காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்துகொண்டு இருந்தது. ஆஜர் எதிரி மற்றும் அவரது மகன் மற்றும் மனைவி இருந்தார்கள். நான் ஆஜர் எதிரி அடித்ததை பார்த்து எதற்காக எனது மனைவியை அடித்தீர்கள் என்று கேட்டேன். அதற்கு எதிரி நான் அப்படிதான் அடிப்பேன் உனது மனைவியை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறினார். பின்னர் அடிப்பட்ட எனது மனைவியை தனியார் மருத்துவமணைக்கு அழைத்து சென்றேன். மருத்துவர் இல்லாததால் பாப்பிரெட்டிப்ட்டி அரசு மருத்துவமணைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். மருத்துவமணையில்

சிகிச்சை பெற்று மறுநாள் பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலைய போலீசாரிடம் எனது மனைவி புகார் கொடுத்தார் நான் அவருக்கு உதவியாக காவல் நிலையம் சென்றேன்.வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

என் வீட்டின் எதிர்வீடுதான் ஆஜர் எதிரியின் வீடு என்றால் சரிதான். என் வீட்டிற்கும் ஆஜர் எதிரி வீட்டிற்கும் சுமார் 10 லிருந்து 12 அடி இருக்கும். என் வீட்டிற்கும் ஆஜர் எதிரி வீட்டிற்கும் இடையில் கிழமேல் வீதி உள்ளது என்றால் சரிதான். வரதகவுண்டனூர் என்பது சுமார் 300 வீடுகள் கொண்ட கிராமம் என்றால் சரிதான். என் வீட்டை சுற்றி சுமார் 20 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். என் வீட்டிற்கு அருகே புஷ்பராஜ், கனேசன், தமிழ்செல்வம், நடராஜன், நீளவானன் ஆகியோர்கள் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். என் மனைவிக்கு ஏற்பட் இரத்த காயத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா 1 என் மனைவி தெளித்த சானம் ஆஜர் எதிரியின் வீட்டின் மேல் பட்டதா அது பற்றி ஆஜர் எதிரியின் மனைவி தனம் என் மனைவியிடம் கேட்டாரா என்றால் ஆம். என் மனைவி அவர் தெளித்த சானத்தில் வழுக்கி கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயத்தை எதிரிதான் தாக்கினார் என்று பொய்யான புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்கண்ட பொய்யான புகாரின் அடிப்படையில் என் மனைவிக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

Calendar **Case No.CC.No. 46 /2023**

Deposition of Sworn Statement

| | |
|---|---|
| Name | : மலர்கொடி |
| Father's Name/Husband Name | : சித்தயைன் |
| Village | :வரதகவுண்டனுர் |
| Taluk | : **பாப்பிரெட்டிப்பட்டி** |
| District | : **தருமபுரி** |
| Caste | : |
| Calling | : PW1 |
| Religion | : Hindu |
| Age | : 59 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21.03.2025**

**எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை.**

நான் தற்போது வரதகவுண்டனுரில் வசித்து கொண்டு வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும் எங்கள் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார். கடந்த 28.03.2021 ம் தேதி காலை 7.30 மணியளவில் நான் எனது வீட்டு முன்பு வாசலுக்கு சானி தெளித்து கொண்டு இருந்தேன். ஆஜர் எதிரி தேவிடிய கண்டார ஒலி என்று தகாத வார்த்தைகாளல் திட்டி கல்லால் தலையில் அடித்து காயப்படுத்தினார் இதனால்இரத்த காயம் ஏற்பட்டது. மேலும் எதிரி நான் வீட்டிற்குள் செல்லும்போது என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். அடிப்பட்ட என்னை எனது கணவர் சித்தயைன் பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார் சிகிச்சை பெற்று வந்து நான் பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலைய போலீசாரிடம் புகார் கொடுத்தேன். இன்று என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரனை செய்தார்கள்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

சம்பவத்ற்கு முன்னிட்டு நான் குடும்பத்துடன் சென்னை யில் வசித்து வந்தேன். நாரயனபிள்ளை வீட்டிற்கும் என் வீட்டிற்கும் சுமார் 10 அடி தூரம்இருக்கும். மேற்கண்ட 10 அடி துரமானது கிழமேல் வீதி என்றால் சரிதான். நாரயணபிள்ளை மனைவியின் பெயர் தனம் ஆகும். பொது வீதியில் நான் சானம் தெளித்தேன் என்றாலும் அந்த சானமானது நாரயணசாமியின் விட்டில்மேல் பட்டு மேற்கண்ட தனம் அதை பற்றி என்னிடம் கேட்டார் என்றாலும் சரியல்ல.சானம் தெளித்ததில் சம்பந்தமாக எனக்கம் தனத்திற்கும் வாய் தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்கண்ட வாய்தகராறில்தான் நான் தெளித்த சானம் வழுக்கி கீழே விழேந்தேன் என்றால் சரியல்ல. சானம் வழுக்கி தானாக விழுந்து அதனால் ஏற்பட்ட காயத்தை கொண்டு ஆஜர் எதிரியின் மேல் பொய்யான புகார் அளித்துள்னோ என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு அருகே சுமார் 20,30 குடும்பம் வசித்து வருகின்றனர். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எனக்கு அடிப்பட்ட விவரங்களை பற்றி புஷ்பராஜ், கனேசன், தமிழ்செல்வம், நடராஜன், நீளவானன் ஆகியோர்களுக்கு தெரியுமா என்றால் தெரியும் அவர்கள் எதிரியின் உறவினர்கள் ஆவார்கள். பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமணையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தீர்காள என்றால் இல்லை. பாப்பிரெட்டிப்ட்டி அரசு மருத்துவமணையில் போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மேற்கண்ட விசாரணையில் வாக்குமூலம் ஏதாவது பதிவு செய்தார்களா என்றால் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் நான் அதில் கையொப்பம் இட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு அ.சா.ஆ.1 நான் மேற்படி மருத்துவமனையில் கொடுத்த வாக்குமூலம் இல்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் உண்மையிலேயே எதிரி தகாத வார்த்தைகளால் பேசி அடித்திருந்தால் மருத்துவமணையில் போலீசார் பெற்ற வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. மேற்கண்ட சம்பவம் பொய்யான சம்பவம் என்பதால்தான் நான் காலதாமதாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த பொய்யான புகார் அடிப்படையில் போலீசார் தாக்கல் செய்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**